**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்**

**O.S. 92/2011**

**வாசா. 4 – விஜயபிரபா, தலைமை உதவியாளர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம்**

**Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the day of 17.11.2025.**

**முதல் விசாரணை**

பழைய சர்வே எண்.3407 க்கான புதிய சர்வே எண்.261/1 க்கான கார்லேஷன் சான்றிதழ் கொண்டு வந்துள்ளேன். **அது வாசாஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** சர்வேஎண்.261/1 தெங்கம்புதூர் கிராமத்துக்கான செட்டில்மென்ட் ரெஜிஸ்டர் கொண்டுவந்துள்ளேன். அதனுடைய நகல் வாசாஆ.7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி வாசாஆ.7 அசல் செட்டில்மென்ட் ரெஜிஸ்டருடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது. மேற்படி வாசாஆ.7 ல் சுடலைமுத்து மகன் செல்வவடிவு நாடச்சி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாசாஆ-7 ல் ரீசர்வே எண்.261/1 ன் விஸ்தீரணம் 13 சென்ட் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 1972 முதல் 1979 ல் நடந்த செட்டில்மென்டிக்கு முன்பு 13 சென்ட் அதற்கு பின்பாக 0.03.5 ஹெக்டேர்ஸ் = 3.5 ஏர்ஸ் என்று வாசாஆ.7 வலது பக்கம் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி செட்டில்மென்டிற்கு பிறகு வேறு நபர்களின் பெயர் சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான். வாசாஆ.7 ல் 13 சென்டில் கிரயம் கொடுத்து 3.5 ஏர்ஸ் குறைந்ததாக எவ்வித விபரமும் வாசாஆ.7 ல் குறிப்பிடப்படவில்லை என்றால் பத்திரம் குறித்து இதில் தெரியாது எஸ்.எல்.ஆர் ரெஜிஸ்டர் படி 3.5 ஏர் என 1979 லிருந்தே துலங்குகிறது. மேற்படி 13 சென்ட் 3.5 ஏர் ஆக எதன் அடிப்படையில் குறைக்கப்பட்டது என்ற விபரம் வாசாஆ-7 ல் துலங்கவில்லை என்றால் வாசாஆ.7 ல் அது தெரியாது. அளந்து பார்க்கும் சமயத்தில் நிலத்தில் என்ன இருக்கிறதோ

அது தான் குறிப்பிடப்படும். நான் கொண்டு வந்துள்ள FMB ல் புதிய சர்வே எண்.261/1 ல் உட்பிரிவுகள் இல்லை என்றால் சரிதான். **மேற்படி FMB வரைபடம் வாசாஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேலும் அ பதிவேட்டில் சர்வே எண்.261/1 ல் செல்ல வடிவு நாடாச்சி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். **மேற்படி அ பதிவேடு வாசாஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** செல்ல வடிவு நாடார் என்பதற்கு பதிலாக செல்ல வடிவு நாடாச்சி என்று தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தற்போதும் வாதியின் கையில் 13 சென்ட் உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எவ்வித சொத்து பரிமாற்றமும் இல்லாமல் மேற்படி 13 சென்ட் 3.5 ஏர் ஆக குறைவதற்கு வாய்ப்பில்லை என்றால் ஆவணங்களின்படி 3.5 ஏர் தான் இருக்கிறது.

**<u>1 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

ரீசர்வே எண்.261/1 ல் தற்போது 3.5 ஏர் இருக்கிறது என்றால் சரிதான். 3.5 ஏர் எத்தனை சென்ட வரும் என்றால் 8 ¾ சென்ட். ரீசர்வேபடி மேற்படி 8 ¾ சென்ட் தவிர கூடுதல் இடம் கிடையாது என்றால் சரிதான். ரீசர்வே எண்.261/1 க்கு வடக்கு பக்கம் பாதை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி பாதை இருப்பது எனக்கு தெரியாது. மேற்படி பாதைக்கு வடக்கு பக்கம் 1 ம் பிரதிவாதியின் வீடு என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

**<u>2 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

கன்னியாகுமரி மாவட்டத்தில் பழைய சர்வே எண் எந்த வருடம் வழக்கத்தில் இருந்தது என்றால் 1920 ல் திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் நடைபெற்ற செட்டில்மென்ட் ரெஜிஸ்டர் உள்ளது. பின்பு 1972 முதல் 1979 வரை நடந்த செட்டில்மென்ட் ரெஜிஸ்டரின்படி 1979 வரை பழைய சர்வே எண் தான் வழக்கத்தில்

இருந்தது. பின்பு ரீசர்வே எண் எப்போது வழக்கத்திற்கு வந்தது என்றால் 1979 க்கு பின்பு மேற்படி ரீசர்வே இறுதி செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி ரீசர்வேக்கு பின்பு அந்தந்த சொத்தின் உரிமையாளருக்கு பட்டா வழங்குவார்கள் என்றால் சரிதான். அவ்வாறு பட்டா வழங்கு சமயத்தில் சொத்தின் விஸ்தீரணம் குறைவாக இருந்தால் முதலாவதாக சொத்தினை அளப்பதற்கு முன்பாக படிவாக 9(2) கொடுப்பார்கள். அதன்பின்பு ஏதேனும் குறைவுகள் இருந்தால் அதனை மேற்படி படிவம் கொடுத்து 15 நாட்களுக்குள் ஆட்சேபனை தெரிவிக்கலாம். அதன்பின்பு சொத்தினை அளந்த விபரத்தை செட்டில்மென்ட் தாசில்தாருக்கு அனுப்பிவிடுவார்கள். மேற்படி செட்டில்மென்ட் தாசில்தார் பட்டாதாரருக்கு படிவம் 1 நோட்டீஸ் கொடுப்பார்கள். அதிலும் ஏதேனும் குறைபாடுகள், ஆட்சேபனைகள் இருந்தால் படிவம் கொடுத்த 15 நாட்களுக்குள் செட்டில்மென்ட் தாசில்தாருக்கு தெரிவிக்கலாம். பின்பு செட்டில்மென்ட் தாசில்தார் பட்டாதாரருக்கு தோராய பட்டா வழங்குவார். மேற்படி தோராய பட்டாவில் சொத்தின் உரிமையாளரின் பெயர், சொத்தின் அளவு, சொத்திற்கான வரைபடம் இருக்கும். அதிலும் ஆட்சேபனை இருந்தால் 15 நாட்களுக்குள் தெரிவிக்கும்படி குறிப்பிட்டிருக்கும். மேற்படி ஆட்சேபனை ஏதேனும் தெரிவிக்கப்பட்டால் அதனை சரிசெய்து கொடுக்க செட்டில்மென்ட் தாசில்தாருக்கு அதிகாரம் உண்டு என்றால் சரிதான். அவ்வாறு ஆட்சேபனை ஏதேனும் கொடுக்காத பட்சத்தில் உரிமையியல் நீதிமன்றத்தில் 3 வருடத்திற்குள் வழக்கு தொடர்ந்து அதனை சரிசெய்துகொள்ளலாம் என்றால் சரிதான். 3 வருடத்திற்கு பின்பு குறைபாடுகள் குறித்து ஆட்சேபனை தெரிவிப்பதற்கு

உரிமை கிடையாது என்றால் சரிதான். மேற்படி ரீசர்வேக்கு பின்பு தற்போது 2024 ல் ஒரு ரீசர்வே தொடங்கியுள்ளது என்றால் சரிதான். தெங்கம்புதூர் கிராமத்திலும் தற்போது ரீசர்வே தொடங்கிவிட்டது என்றால் சரிதான். நான் கொண்டுவந்த ஆவணங்களின்படி தெங்கம்புதூர் கிராமத்தின் ரீசர்வேஎண்.261/1 ல் 3.5 ஏருக்கு தான் பட்டா நிலம் உள்ளது என்றால் சரிதான். வாசாஆ-8 படி பழைய சர்வே எண்.3407 உடன் ஒத்து வருகின்ற ரீசர்வே எண்.261/6 என்ற உட்பிரிவு வரவில்லை என்றால் சரிதான்.

**<u>3 ம் பிரதிவாதி தரப்பில் 2 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்படுகிறது</u>**

**<u>வாதி தரப்பில் மீண்டும் குறுக்கு விசாரணை</u>**

ரீசர்வே எண்.261/1 ன் வடக்கு பக்கம் அரசுக்கு பாத்தியப்பட்ட பாதை உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வாசாஆ.7 ல் ரீசர்வே எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.